**பக்கம் 1:**
மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான
அகில உலக ஜெப நாள் 2023

# நான் அவர்கள் விண்ணப்பத்தை கேட்டேன்

குழந்தைகளுக்கான ஆதாரம்

எழுதியவர் மேஜர் சான்ரா பவார்
*தென்அமெரிக்க மாகாணம்*

## வரிசை 1:

## அறிமுகம்

**கனவுகளின் கம்பளம்**
ரவியின் கதை

இது ஒரு உண்மை கதை. என் பெயர் ரவி. ஏனக்கு 12 அல்லது 13 வயது இருக்கும் என நினைக்கிறேன். நான் சிறுவனாக இருக்கும்போது என் கிராமத்திற்கு ஒரு மனிதன் வந்தான். கையால் செய்யப்பட்ட தரைவிரிப்புகளை உருவாக்க, அவருக்கு வேலை செய்ய சிறுவர்களை தேடிக்கொண்டிருந்தார். அவர் என் பெற்றோர்களை சந்தித்து என்னால் நல்ல சம்பளத்தை பெற்றுக்கொள்ள முடியும் என கூறினார். நான் வீட்டை விட்டு வெளியேற விரும்பவில்லை மற்றும் என் பெற்றோர்கள் என்னுடன் உடன்பட்டனர். ஆனால் அந்த மனிதன் அதை விரும்பவில்லை. முடிவில் என் பெற்றோர்கள் அந்த மனிதனுக்கு சம்மதித்தனர். அந்த மனிதன் என்னை அழைத்து செல்ல 10 டாலரை என் பெற்றோருக்கு கொடுத்தான். அவன் பொய் சொன்னான். நான் எதையும் சம்பாதிக்கவில்லை. அந்த மனிதனின் வீட்டிற்கு சென்ற இரயில் பயணம் இன்னும் என் நினைவில் இருக்கிறது. அந்த பயணம் முழுவதிலும் அவன் எனக்கு உணவு தரவில்லை. நாங்கள் சென்றடைய வேண்டிய இடம் வந்தபோது சிறிது உணவை எனக்கு சாப்பிட தந்தான். மறுநாள் நான் எழும்பின பின்பும் எனக்கு சாப்பிட உணவு தரவில்லை. பின்னர் அந்த மனிதன் இயந்திரங்கள் மற்றும் தறிகள் வைத்திருக்கும் இடத்திற்கு அழைத்து சென்றான்.

பாதுகாப்பிற்காக பெயர் மாற்றப்பட்டுள்ளது

## வரிசை 2 :

அப்போது தான் நதன் ஒரு தறியை முதன்முறையாக பார்த்தேன். முதல்நாளிலே நான் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டேன். நான் அதில் உட்கார வைக்கப்பட்டேன் பகலிலே என் வேலை முடியாவிட்டால் மெழுகுவர்த்தி வெளிச்சத்திலும் வேலை செய்ய வேண்டியிருந்தது. பல மணிநேரங்கள் வேலை செய்ய கட்டாயப்படுத்தபட்டேன், சரியான தூக்கம் கிடைக்கவில்லை ஏனென்றால் நான் எப்போதும் சோர்வாக இருப்பதால் தவறுகள் செய்தேன். எனக்கு பணம் கிடைக்கவில்லை மாறாக படுக்கை கிடைத்தது. நாங்கள் அனைவரும் ஒரே அறையில் வேலை செய்து தூங்கினோம், ஒரு நாளில் 12 மணிநேரம் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டோம். ஒருநாளில் ஒருமுறை மட்டுமே குளியலறையை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டோம், அதன் எண்ணிக்கை கூட கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சிறிதளவு அரிசி உணவே தரப்பட்டது. குடைசியாக போலிசார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் மீட்கப்பட்டேன். நான் பயந்தேன். நான் மீண்டும் அடிக்கப்படுவேன் மற்றும் அவர்கள் என்னை வெளியே எறிந்துவிடுவார்கள் என நினைத்தேன். அதிஷ்டவசமாக அப்படி நடக்கவில்லை.

அடிக்குறிப்பு :

1 குழந்தைகள் ஆதாரம்

**புக்கம் 2 :**

**வரிசை 1 :**

ஒரு குழந்தைகளை கவனிக்கும் இடம். நான் இங்கே இருப்பதை விரும்புவேன். எனக்கு நண்பர்கள் உண்டு. நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் மற்றும் நான் பள்ளிக்கூடம் செல்கிறேன். நான் அடிமையாக இருந்ததை புரிந்துக்கொள்ள அவர்கள் எனக்கு உதவுகிறார்கள். நான் எலக்ட்ரீசியனாக படிக்க விரும்புகிறேன். ஏன் சகோதர சகோதரிகள் மற்றும் என் கிராமத்தில் உள்ள அனைவருக்கும் அதை கற்றுக்கொடுக்க விரும்கிறேன்.



**வுரிசை 1 :**

**பெரிய திட்டம்**
**அடிமையாக இருப்பது அடிமைதனத்தில் இருப்பது எதை குறிக்கிறது?**

அடிமைதனம் என்பது புதிய யோசனையல்ல. இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்துவரும் ஒன்று. வேதாகமத்தில் கூட அதைபற்றி படிக்கிறோம் மற்றும் கிரேக்கர்கள், ரோமானியர்கள் மற்றும் எகிப்தியர் பற்றிய வரலாற்றை படிக்கும்போது அவர்கள் எல்லோரும் எப்படி அடிமைகளை வைத்திருந்தார்கள் என்பதை பற்றி அறிய முடியும். இன்றும் பலர் அடிமைகளாக இருக்கின்றனர். உண்மையில் தற்போது 49.6 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உலகம் முழுவதிலும் அடிமைகளாக இருக்கின்றனர். இது அதிகமில்லையா?

விவாத கேள்விகள்

- ஒருவர் அடிமையாக இருப்பதை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
- ரவி ஒரு அடிமையாக தன் குடும்பம் மற்றும் கிராமத்தை விட்டு பிரிந்திருப்பதை எப்படி உணர்ந்திருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- அடிமைகள் மற்றும் அடிமைத்தனத்தில் இருப்பவர்கள் மீது கடவுள் அக்கறையோடிருக்கிறார் என நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன் அல்லது ஏன் இல்லை?
- அடிமைகள் மற்றும் அடிமைத்தனத்தில் இருப்பவர்கள் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும் என நினைக்கிறீர்கள்? ஏன் அல்லது ஏன் இல்லை?

வரிசை 2 :

அடிமைகள் எப்போதும் பயம் மற்றும் பாதுகாப்பற்ற சூழ்நிலைகளில் வைக்கப்படுகிறா்ாகள். மேலும் அவர்கள் முக்கியமானவர்கள் அல்ல என்று அடிக்கடி உணர வைக்கப்படுகிறார்கள். அவர்கள் நியாயமற்ற கடினமான மற்றும் அவர்களை பாதிக்கும் விஷயங்களை செய்ய வைக்கப்படுகிறார்கள். அவர்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அவர்களின் கூக்குரலை யாரும் கேட்கவில்லை என்றும் உணர வைக்கப்படுகிறார்கள். அவர்கள் மிகவும் தனிமையாகவும் சோகமாகவும் உணரலாம்.

கடவுள் அவர்கள் மீது அக்கறை காட்டுகிறார் என்பதையும் அவர்கள் அவருக்கு முக்கியமானவர்கள் என்பதையும் நாம் அறிவோம். அவர் அவர்களை ஆழமாக நேசிக்கிறார் மற்றும் அவர்களின் சோகத்தையும் கூப்பிடுதலையும் கேட்கிறார். வேதாகமத்தில் யாத்திராகமம் புத்தகத்தை வாசிக்கும்போது கடவுள் அவர்களை கேட்பதையும் பராமரிப்பதையும் காணலாம். யாத்திராகமம் 2:23-25 பார்க்கும்பொழுது, சில காலம் சென்றபின் எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் . தேவன் இஸ்ரவேல் புத்திரரை கண்ணோக்கினார். தேவன் அவர்களை நினைத்தருளினார்.

கலந்துரையாடல் கேள்விகள்

இந்த வசனங்கள் கடவுளைபற்றி என்ன கூறுகின்றன? அவர் என்ன செய்கிறார் என்று சொல்லுகிறது?

ஆயிரகணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரவேலர் அடிமைகளாக மோசமாக நடத்தப்பட்டபோது கடவுள் அவர்களிடம் ஆழ்ந்த அக்கறை காட்டினார். இன்றும் உலகில் அடிமை நிலையில் இருக்கும் கோடிக்கணக்கான மக்கள், பெரியவர்கள் ரவி போன்று தவறாக நடத்தப்படும் குழந்தைகள் யாராவது அக்கறை காட்ட எதிர்பார்க்கிறார். யாத்திராகமம் புத்தகத்தில் நாம் வாசிக்கும் வசனங்கள் அவர்கள் தனியாக இல்லை என்பதையும், கடவுள் கேட்கிறார், பார்க்கிறார் மற்றும் அவர் புரிந்து கொள்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது.

அடிக்குறிப்பு

குழந்தைகளுக்கான ஆதாரம்

பக்கம் 3 :
இடது பக்கம்:

அடிமை நிலையில் இருக்கும் கோடிக்கணக்கான மக்கள், பெரியவர்கள் ரவி போன்று தவறாக நடத்தப்படும் குழந்தைகள் தங்கள் மீத யாராவது அக்கறை காட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கிறாகள். யாத்திராகமம் புத்தகத்தில் நாம் வாசிக்கும் வசனங்கள் அவர்கள் தனியாக இல்லை என்பதையும், கடவுள் கேட்கிறார், பார்க்கிறார் மற்றும் அவர் புரிந்து கொள்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது.

வலது பக்கம்:

அடிமைகளாகவும் அடிமைத்தனத்தில் சிக்கியிருப்பவர்களை பற்றியும் நாம் அக்கறை கொள்ள வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். மோசமான முறையில் நடத்தப்படும் மக்களுக்கு உதவும் வழிகளை பற்றி நாம் அறிந்திருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார்.

வரிசை 1 :

கலந்துரையாடல் கேள்விகள்

நாங்கள் என்ன செய்ய முடியும் என்பதை பற்றிய உங்களுடைய யோசனைகள் என்ன?

1. அடையாளங்களை அறிந்து கொள்ளுங்கள் - ஒருவர் சுரண்டப்படுவதை காண்பிக்கும் அறிகுறிகளை அறிந்து கொள்ளுங்கள். நிறைய காரியங்களை கவனிக்க வேண்டும். மக்களின் வாழ்க்கை நிலை, பணி நிலைகள் மற்றும் அவர்களை சுற்றியுள்ளவர்களால் அவர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை பார்க்க வேண்டும்.

2. இணையதளத்தில் எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் - நீங்ளும் உங்கள் நண்பர்களும் ஒருவரையொருவர் எப்படி பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்?
3. இன்று நீங்கள் கற்றுக்கொண்ட அடிமைத்தனத்தின் அறிகுறிகளை உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்
4. அடிமைத்தனம், மனித கடத்தல் மற்றும் சுரண்டலை அதிகம் அறிந்து கொள்ளுங்கள். உங்கள் குடும்பம், சபை மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்கள் ஞயிறு பள்ளி மற்றும் பள்ளிகூடத்தில் விளக்கமாக சொல்லலாம்.

வுரிசை 2:

5. ஜெபம் அடிமைத்தனத்தில் இருக்கும் மக்களுக்காகவும் கடவுள் அவர்கள் விண்ணப்பத்தை கேட்டு அவர்களை பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.
6. இரக்கம், மரியாதை மற்றும் அன்புடன் மக்களை நடத்துங்கள்.
7. இரக்கம், மரியாதை மற்றும் அன்புடன் மக்களை நடத்த உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களை உற்சாகபடுத்துங்கள்.
8. உங்கள் பள்ளிகூடம், ஆலயம் மற்றும் அரசாங்கத்திலுள்ள தலைவர்களிடம் பாதுகாப்பற்ற மக்களுக்கு உதவி செய்யும்படி கேளுங்கள்.

இரண்டு பக்கங்களில்

அடையாளங்களை அறிந்து கொள்ளுங்கள் - ஒருவர் சுரண்டப்படுவதை காண்பிக்கும் அறிகுறிகளை அறிந்து கொள்ளுங்கள

**அடிக்குறிப்பு**

3. குழந்தைகளுக்கான ஆதாரம்

பக்கம் 4:

உலகத்தில் அடிமைபடுத்தப்பட்டு அடிமைகளாக நடத்தப்படும் மக்களுக்காக நாம் இணைந்து ஜெபிப்போம்.

அன்புள்ள இயேசுவே,

உலகத்தில் அடிமைபடுத்தப்பட்டு அடிமைகளாக நடத்தப்படும் மக்களுக்கு உதவி செய்யும். அவர்கள் விடுதலையும் பாதுகாப்பையும் பெற உதவி செய்யும். அவர்கள் குடும்பத்தை பாதுகாத்து பிரிந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்றுசேர உதவி செய்யும். அவர்கள் வாழ்க்கை கடினமாகவும் சோகமாகவும் இருக்கும்போது நீர் அவர்களை நேசிப்பதையும் பாதுகாப்தையும் அறிந்துக்கொள்ள உதவி செய்யும்.

ஆமென்.

9 வயது அலினாவின் ஜெபம் - நெறிமுறை கதை கட்டமைப்பில் அனுமதி வழங்கப்படுகிறது

வுரிசை 1 :

செயல்முறை உறைந்த இணைப்பு

குழந்தைகள் ஓடி விளையாடக்கூடிய பகுதியிலிருந்து ஒருவரை ‘அது’ என்று தெரிந்தெடுங்கள். மற்ற குழந்தைகளை 20 நிமிடங்கள் ஓட செய்யலாம். 20 நிமிடங்களுக்கு பிற்பாடு ‘அது’ என்கிற குழந்தை ஓடி சிலரை குறியிடலாம். குறியிடப்பட்ட குழந்தைகள் உறைந்த நிலையில் கைகளை வெளியே நீட்டியவாறு நிற்க்க வேண்டும். மற்ற குழந்தைகள் அவர்களுக்கிடையே நுழைந்து அவர்களை விடுவிக்க வேண்டும். இதை வாழ்க்கையோடு ஒப்புமைபடுத்தி அடிமைத்தனத்தில் இருப்பவர்களின் விண்ணப்பத்தை கேட்டு நம்மை போல அவர்களும் வாழ உதவி செய்ய வேண்டும்.

வுரிசை 2

செயல்பாடு கைவினை

உறைந்த இணைப்பு விளையாட்டை போல பலவண்ண காகித துண்டுகளில் “நிறுத்துங்கள்” என எழுதி பசையை பயன்படுத்தி அதை இணைத்து சங்கிலி போல உருவாக்குங்கள். அந்த காகித சங்கிலி அடிமைத்தனத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் சபையின் உறுதிபாட்டை குறிக்கிறது. யார் நீளமான காகித சங்கிலி உருவாக்குகிறார் என்பதை பார்க்கலாம். உலகில் அடிமைத்தனத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் உறுதி கொண்டுள்ளோம் என்பதை வெளிகாட்ட அதை தொங்கவிடலாம்.

